யாழ்ப்பாணம்

Registered as a Newspaper | பக்கங்கள் 06 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | People's Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 26 | (11-12-93) | சனிக்கிழமை | ஓசை 2?6

## பல்கலை. வெட்டுப்புள்ளி மாற்றம் மானிய ஆணைக்குழு கைவிரிப்பு

வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் பிரச்சினை தொடர்பாகவும் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான புதிய நடைமுறை பற்றியும் பேச்சுவார்த்தை நடத்த கொழும்புசென்ற யாழ். பல்கலைக் கழகக் குழு வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக எந்த முடிவும் இல்லாமல் திரும்பியது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ள யாழ் பல்கலைககழக எல்லாப் பீடங்களையும் உள்ளடக்கிய ஐந்துபேர் கொண்ட மாணவர் குழு கொழும்பு சென்றிருந்தது. பல்கலைக்கழக அனுமதி தொடர்பான புதிய நடைமுறை பற்றிக் கலந்தாலோசிக்கும் கூட்டத்திற்கு அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் (5 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ விசாரணைக் குழுவினால் யாழ். தளபதிகள் மீது விசாரணை!

### இணைப்பு

''பூநகரியில் களம் கண்ட வரலாற்று நாயகர்கள்'' எனும் வீரச்சாவு அடைந்த போராளிகளது படத்தைத் தாங்கிய இணைப்பு இன்று தென்மராட்சிப் பிரதேசத்திற்கு விநியோகிக்கப்படும் ஈழநாதத்துடன் வெளிவருகிறது. ஏனைய பிரதேசங்களுக்கு இவ் இணைப்பு நாளை கிடைக்கும்.

## தோல்விக்கான காரணம் பற்றி கேள்வி!

(கொழும்பு)

**பூநகரி தளத்தின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது திறமையின்றிச் செயற்பட்டது குறித்தும், தோல்விக்குரிய காரணம் குறித்தும் அறிந்து கொள்ளும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ விசாரணைக்குழு இராணுவ அதிகாரிகள் மீதான விசாரணையை ஆரம்பித்துள்ளது. இவ் விசாரணையின் முதற்கட்டமாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த பிரிகேடியர் நமுனியும், தீவுப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த கேணல் நிசாந்த கொட்டகொடவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.**

பூநகரித் தோல்வியைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாரணைக் கமிசன் கடந்த வார இறுதியில் பூநகரி முகாமில் இருந்து உயிர்தப்பியவர்களிடம் தமதுவிசாரணையை முடித்திருந்தது இதனைத் தொடர்ந்தே தற்பொழுது வடபகுதியில் உள்ள இராணுவ அதிகாரிகளையும், முகாம்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் மீதும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை இவ் இரு இராணுவ அதிகாரிகளும் இராணுவ விசாரணைக் குழுவின் முன் ஆஜராகியதாகவும் அன்றையதினமே இவ் அதிகாரிகள் மீதான முதல் கட்ட இராணுவ விசாரணை நடைபெற்றதாக கொழும்பில் இருந்து நேற்றுமாலை எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் விசாரணையைத் தொடர்ந்து மேலும் பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இவ் இராணுவ விசாரணைக் குழுவின்முன் ஆஜராக வேண்டிய நிலை தோன்றியுள்ளதாகவும் இவ்இராணுவ அதிகாரிகள் மீதான விசாரணை பெரும்பாலும் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று தெரியவருகிறது.

இதேவேளை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் நமுனியும், ஊர்காவற்றுறை முகாம் பொறுப்பாளர் கேணல் நிசாந்த கொட்டகொடவும் பதவி விலக உள்ளதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

## பூநகரி தோல்வியின் எதிரொலி; சிங்கள பத்திரிகையின் சீற்றம்!

(கொழும்பு)

''வடக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தை வெற்றி கொள்ள வேண்டும் அல்லது விடுதலைப் புலிகளிடம் வட பகுதியைப் பிரித்துக் கொடு... கள் கொல்லப்பட்டோ அல்லது காயப்பட்டோ உள்ளனர். முடிவில்லாமல் தொடரும் இந்த யுத்தம் எங்கே போய் முடியும்? இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடி... விட்டால் இதற்கான காரணம் என்ன? என்பதைக் கண் (5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விமானக்குண்டுவீச்சு ஏழுபேர் காயம்; கட்டடங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று கிளிநொச்சியில் நடாத்திய விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலினால் ஏழுபொதுமக்கள் காயமடைந்தனர். சாதாரணதர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பாடசாலை உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன.

புக்காரா விமானம் ஒன்றும், சியாமசெட்டி விமானம் ஒன்றும், உலங்குவானூர்தி ஒன்றும் நேற்றுக்காலை எட்டு மணியளவில் கிளிநொச்சிக் கிராமங்களைச் சுற்றி வட்டமிட்டுக் குண்டுகளை வீசின.

இத் தாக்குதலில் ஆறுமுகம் இந்திராணி என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார். வீடொன்று முற்றாகச் சேதமடைந்தது மேலும் மூன்றுக்கும்மேற்பட்ட வீடுகள் சேதங்களுக்குள்ளாகின. நாற்பதுக்கும் மேற்பட்ட கால்நடைகள் கொல்லப்பட்டன.

பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த 236 மாணவர்களும் மேற்பார்வையாளர்களும் அவலக்குரல் எழுப்பியவாறு சிதறி ஓடினர். இத்தாக்குதலின்போது அரிசிஆலை ஒன்றும் அரச அலுவலகம் ஒன்றும் சேதமடைந்தன.

இதனை அடுத்து பத்துமணியளவில் புக்காரா விமானம் ஒன்று அதே பகுதியில் ரொக்கற் தாக்குதலை நடாத்தியது. இதனால் மூவர் காயமடைந்தனர். பல கால்நடைகளும் காயப்பட்டன.

விடுதலைப்புலிகள் நடாத்திய எதிர்த்தாக்குதலை அடுத்து புக்காரா விமானம் திரும்பிச் (5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு 5 புலமைப்பரிசில் முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன. இப் பரீட்சை முடிவுகளின் படி தமிழ் மூலம் பரீட்சைஎடுத்த மாணவர்களில் கந்தரோடை கந்தையா தமிழ் வித்தியாலய மாணவன் பி பிரகாஸ் 190 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

பரீட்சைக்கு தோற்றிய 3,27,746 பேரில் 20 555 பேர் பிரபல பாடசாலை... 7391 பேருக்கு புலமைப் பரிசில் பெறும்வாய்ப்புக் கிடைத்துள்ளது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இப் பெறுபேறுகள் அடுத்த வாரத்திற்குள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப் படும் என அறிவிக்கப்படுகிறது

## மாகாணசபை உறுப்பினர் கடத்தல்

## பூநகரி கூட்டுப்படைத் தளம் தகர்ப்பு

யும், தீவுப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த கேணல் நிசாந்த கொட்டகொடவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பூநகரித் தோல்வியைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாரணைக் கமிசன் கடந்த வார இறுதியில் பூநகரி முகாமில் இருந்து உயிர்தப்பியவர்களிடம் தமதுவிசாரணையை முடித்திருந்தது இதனைத் தொடர்ந்தே தற்பொழுது வடபகுதியில் உள்ள இராணுவ அதிகாரிகளையும், முகாம்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் மீதும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை இவ் இரு இராணுவ அதிகாரிகளும் இராணுவ விசாரணைக் குழுவின் முன் ஆஜராகியதாகவும் அன்றையதினமே இவ் அதிகாரிகள் மீதான முதல் கட்ட இராணுவ விசாரணை நடைபெற்றதாக கொழும்பில் இருந்து நேற்றுமாலை எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் விசாரணையைத் தொடர்ந்து மேலும் பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இவ் இராணுவ விசாரணைக் குழுவின்முன் ஆஜராக வேண்டிய நிலை தோன்றியுள்ளதாகவும் இவ்இராணுவ அதிகாரிகள் மீதான விசாரணை பெரும்பாலும் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று தெரியவருகிறது.

இதேவேளை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் நமுனியும், ஊர்காவற்றுறை முகாம் பொறுப்பாளர் கேணல் நிசாந்த கொட்டகொடவும் பதவி விலக உள்ளதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

# பூநகரி தோல்வியின் எதிரொலி; சிங்கள பத்திரிகையின் சீற்றம்!

(கொழும்பு)

''வடக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தை வெற்றி கொள்ள வேண்டும் அல்லது விடுதலைப் புலிகளிடம் வட பகுதியைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். இந்த இரண்டில் எதை செய்ய வேண்டும் என்பதைஆட்சியாளரும்இராணுவத் தளபதிகளும் உடனடியாகத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.'' இவ்வாறு தென்பகுதியில் இருந்து வெளிவரும் ''திவயின'' என்ற சிங்கள வாரஇதழில் கடந்த 19 ஆம் திகதி வெளியாகிய ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கடந்த 10 வருடங்களாக வடக்கில் எத்தனை ஆயிரம் சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். இந்த வருடம் மட்டும் சுமார் 3000றக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டோ அல்லது காயப்பட்டோ உள்ளனர், முடிவில்லாமல் தொடரும் இந்த யுத்தம் எங்கே போய் முடியும்? இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடியுமா? இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடியாவிட்டால் இதற்கான காரணம் என்ன? என்பதைக் கண்

(5ஆம் பக்கம் பார்க்க)

னக் குண்டுவீச்சுத் தாக்குதலினால் ஏழுபொதுமக்கள் காயமடைந்தனர். சாதாரணதர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பாடசாலை உட்பட பலகட்டடங்கள் சேதமடைந்தன.

புக்காரா விமானம் ஒன்றும், சியாமசெட்டி விமானம் ஒன்றும், உலங்குவானூர்தி ஒன்றும் நேற்றுக்காலை எட்டு மணியளவில் கிளிநொச்சிக் கிராமங்களைச் சுற்றி வட்டமிட்டுக் குண்டுகளை வீசின.

இத் தாக்குதலில் ஆறுமுகம் இந்திராணி என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார். வீடொன்று முற்றாகச் சேதமடைந்தது மேலும் மூன்றுக்கும்மேற்பட்ட வீடுகள சேதங்களுக்குள்ளாகின. நாற்பதுக்கும் மேற்பட்ட கால்நடைகள கொல்லப்பட்டன.

அவலக்குரல் எழுப்பியவாறு சிதறி ஓடினர். இத்தாக்குதலின்போது அரிசிஆலை ஒன்றும் அரச அலுவலகம் ஒன்றும் சேதமடைந்தன.

இதனை அடுத்து பத்துமணி மடைந்தனர். பல கால்நடைகளும் காயப்பட்டன.

விடுதலைப்புலிகள்நடத்திய எதிர்த்தாக்குதலை அடுத்து புக்காரா விமானம் திரும்பிச்

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஆண்டு 5 புலமைப்பரிசில் முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன. இப் பரீட்சை முடிவுகளின் படி தமிழ் மூலம் பரீட்சைஎடுத்த மாணவர்களில் கந்தரோடை கந்தையா தமிழ் வித்தியாலய மாணவன் பி பிரகாஸ் 190 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

பரீட்சைக்கு தோற்றிய 3,27,746 பேரில் 20 555 பேர் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறும் தகுதியினைப் பெற்றுள்ளனர். 7391 பேருக்கு புலமைப் பரிசில் பெறும்வாய்ப்புக் கிடைத்துள்ளது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது இப் பெறுபேறுகள் அடுத்த வாரத்திற்குள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது

## மாகாணசபை உறுப்பினர் கடத்தல்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தென்மாகாண சபையின் உறுப்பினர் ஒருவர் இனம் தெரியாத நபர்களினால்கடத்திச்செல்லப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

விமால் பிரான்சிஸ் குமார் என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனவும், தென்மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட உள்ள நிலையில் இவரைக் கடத்திச் செல்வதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி நடைபெறுகிறது எனவும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## [ பூநகரி கூட்டுப்படைத் தளம் தகர்ப்பு ]

# புலிகளின் சாதனையையும் தியாகத்தையும் போற்றும் மூன்று நாள் மாபெரும் வெற்றிவிழா

பூநகரி படைத்தளம்மீதான தாக்குதல் வெற்றியின் அரசியல் - இராணுவ பரிமாணங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கிலும், இந்த இராணுவ சாதனையின் போது உயிர்நீத்த விடுதலைப் புலி வீரர்களினது வீரத்தையும் தியாகத்தையும் நினைவுகூரும் வகையிலும், வெற்றிவிழா ஒன்று இன்றும், நாளையும், நாளை மறுதினமும் எழுச்சி பூர்வமாக கொண்டாட விடுதலைப் புலிகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இவ் வெற்றிவிழா தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த அறிக்கையில்;

பூநகரி கூட்டுத்தளம்மீது வெற்றிகரமாக நடந்து முடிந்த 'தவளை' இராணுவ நடவடிக்கையின் ஒரு மாத பூர்த்தியை வெற்றிவிழாவாக எமது இயக்கம் கொண்டாடுகிறது.

11-ம், 12-ம், 13-ம் திகதிகளில் இந்த வெற்றிவிழா எழுச்சி பூர்வமாக அனுட்டிக்கப்படும்

இந்தத் தாக்குதல் வெற்றியின் அரசியல்-இராணுவ பரிமாணங்களை எமது மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கிலும், இந்த இராணுவ சாதனையினபோது உயிர்நீத்த புலி வீரர்களது வீரத்தையும், தியாகத்தையும் தமிழினம் நினைவு கூரும் வகையிலும், இந்த வெற்றி விழா அமையும்.

பூநகரி வெற்றியின்ஒருமாத பூர்த்தியை தமிழீழ மக்கள் கொண்டாடும் இந்த வேளையில் பூநகரிப் பேரழிவால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சிங்கள தேசம் இன்னமும் மீளவில்லை.

சிங்கள தேசத்து இராணுவ வரலாற்றில் முதற் தடவையாக ஒரு இராணுவத்தோல்விக்கும், அதில் சிங்களப் படை சந்தித்த பெருநாசத்திற்கும் பொறுப்பேற்று, அதன் இராணுவ ஜெனரல் பதவி விலகவேண்டிய நெருக்கடி சிறிலங்காவில் எழுந்துள்ளது.

'ஆறுமாதத்தில் பிடிக்கிறேன்' 'ஒருவருடத்தில் முடிக்கிறேன்' என்றவாறாக தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் வாய்ச்சவடால் விடுத்த ஜெனரல் சிசில் வைத்தியரத்னா இன்று ''தோல்வியுறும் இராணுவத்திற்கு தளபதியாக இருக்க விரும்பவில்லை'' என்று விரக்தியுடன் கூறுமளவுக்கு பூநகரி

(6ஆம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரிமீது எறிகணைத் தாக்குதல்

## சுகாதார அமைச்சுக்கு பணிப்பாளர் அறிவிப்பு

மருத்துவமனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல் குறித்து சுகாதார அமைச்சுக்கும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் தாம் அறிவித்துள்ளதாக மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு பாதுகாப்பு வலயப் பகுதியில் மருத்துவமனை வாயிலுக்கு முன்பாக வீழ்ந்து வெடித்த எறிகணையினால்

(5ஆம் பக்கம் பார்க்க)

# எறிகணைவீச்சு குறித்து சர்வதேச செஞ்சிலுவை ஆட்சேபம்

யாழ். போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் எறிகணை வீச்சு தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடும்ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி பியாட்சுவிட்ஸர், இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டெமினி டிபோவிற்கு நேற்று வானொலி மூலம் பாதுகாப்பு வலயத்தில் நள்ளிரவில் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் குறித்தும் இதனால் காயமடைந்த வைத்தியர், பொதுமக்கள் பற்றியும் தெரிவித்தார்.

இதனையடுத்து இலங்கை வதிவிடப் பிரதிநிதி சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவுடன் தொடர்பு கொண்டதாகவும் அப்பொழுது தொடர்ந்து இவ்வாறான தாக்குதல் நடைபெறமாட்டாது என தெரிவித்ததுடன் யாழ். மாவட்ட பல அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவிப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வெற்றிவிழாவை அறிவிக்க பல்வேறு நிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி விழாவை முன்னிட்டு இவ் விழாவை பறைசாற்றும் வகையிலான பல நிகழ்வுகள் கடந்த சில தினங்களாக யாழ் குடாநாடுமுழுவதும் நடைபெற்றுள்ளன.

கருத்தரங்குகள், வீடியோ படக்காட்சிகள், கலைநிகழ்வுகள் என்பன உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் 'ஒபரேசன் தவளை' தொடர்பான பாடல்கள், கலைநிகழ்வுகள் என்பன இவற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன

நேற்று முன்தினம் இரவு கல்வியன்காட்டுப் பகுதியிலிருந்து இளைஞர்களால் எழுச்சித் தீ யாழ். வீதிகளினூடாக எடுத்துச் செல்லப்பட்டன. தீப்பந்தங்களை ஏந்தியவாறு பல இளைஞர்கள் வீதிகளூடாக ஓடிச்சென்றனர். இவ்வாறான எழுச்சித்தீ ஏந்திச்செல்லும் நிகழ்ச்சிகள் நேற்று இடம்பெற்றன:

(5ஆம் பக்கம் பார்க்க)

## படகுச்சேவை நிறுத்தம்

கிளாலி - பூநகரி படகுச் சேவை மறுஅறிவித்தல்வரை நடைபெற மாட்டாது என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மட்டுவிலில் இன்று வெற்றிவிழா கூட்டம்

அணிவகுப்பும் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகவுள்ள பூநகரி வெற்றிவிழா பொதுக் கூட்டம் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 4. 00 மணிக்கு ஆரம்பமாகும். இப் பொதுக்கூட்டம் ஆரம்பமாகு முன்னர் அணிவகுப்பு நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.


### பூநகரி வெற்றி நாள்

பூநகரிக் களத்திலே புலிப்படை பாய்ந்தது
ஊறிடும்குருதியில் பகைப்படைதேய்ந்தது
நாகதேவன்துறை நெருப்பிலே எரிந்தது
நான்குமாதிசைகளும் வியப்பினால்
விரிந்தது.

சாவு ஒருமுறை தாமெமக்கு!
சந்திப்போம் எதிரியைப் பயமெதற்கு?

பூநகரியில் வீரகாவியம் படைத்த வேங்கைகளுக்கு வீரவணக்கம்

கைத்தொழில் வர்த்தக சங்கம்
(5077) சாவகச்சேரி.

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

கடைக்குத் தேவையான கண்ணாடி அலுமாரி (8 அடி x 6 அடி) - 1, ஷோ சேஸ் - 2, விராக்கிகள் - 4, 2 அங்குல சதுர இரும்புவலைகள். தொடர்பு: B. J. நவரத்தினம், 391, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (6778)

### பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14. Seenier Lane, Jaffna. (சி-8096)

### புலமைப்பரிசில் வகுப்பு

ஆண்டு 5 புலமைப்பரிசில் 1994 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் 14-12-93 செவ்வாய் பி.ப 3-00 மணிக்கு ஆரம்பமாகும், ஆசிரியர் அம்பிகைபாகன். மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6843)


## 487 மாணவர்கள் அனுமதிபெறுவர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய கல்வி ஆண்டிற்காக 487மாணவர்கள தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்

## பெற்றார் தினமும் பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலய பெற்றார்தினமும் பரிசளிப்புவிழாவும் வித்தியாலய அதிபர் திரு ந. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. விழாவிலே பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார் திருமதி செல்வநாயகி செல்லத்துரை பரிசில்களை வழங்கினார்.

## பொது நூலகத் திறப்பு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உபஅலுவலகத்தில் அண்மையில் பொது நூலகம் திறந்து வைக்கப்பட்டு உள்ளது. உப அலுவலகப் பொறுப்பதிகாரி செ. குகதாசன் தலைமையில் நடைபெற்றஇவ் வைபவத்தில் கோப்பாய் பரதேச செயலாளரும் விசேட ஆணையாளருமான க. கேதீஸ்வரனும் கலந்து கொண்டார்.


## நெஞ்சை விட்டகலா 31 ஆம் நாள் நினைவு



அன்னை மடியில்: 19-01 1975

அன்னை தமிழுக்காய்: 12-11.1993

### லெப். கனியன் - நிசாந் (சில்வன் சஜிவன் ஆரோக்கியநாதர்)

பூநகரி இராணுவ முகாம் அழிப்பில் தன்னை ஆகுதி ஆக்கிக்கொண்ட லெப். கனியன் - நிசாந் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமதுவீர அஞ்சலிகள்.

எமது மகன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 31 ஆம் நாள் நினைவில் அவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் ஞாயிறுக் கிழமை (12-12-1993) காலை 10.15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதில் பங்குபற்றி அவரின் விண்ணக வாழ்வுக்காகச் செபிக்கும்படி அழைக்கின்றோம். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

எமது மகனின் வீரச்சாவுச் செய்தி அறிந்து எமது இல்லம் வந்து எமது துயரில் பங்குகொண்ட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பல வகைகளிலும் உதவி புரிந்த அனைவர்க்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

32/5 அச்சக வீதி, யாழ்ப்பாணம்

தந்தை, தாய், சகோதரி, சகோதரன்.

(6756)



## நினைவு கூருகின்றோம்... 1993-12-11

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய்வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு சுன்னாகம் மயிலணிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சங்கர் விக்கி** (தங்கராசா விக்கினேஸ்வரராஜ்-அம்மன்வீதி, உடுவில் வடக்கு-சுன்னாகம்)

1988ஆம் ஆண்டு வந்தாறுமூலை, சிவத்தப்பாலம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம லெப்.கெனடி** (சேகரம்பிள்ளை கஜேந்திரன் - கறுவங்கேணி, வாழைச்சேனை-மட்டு)

யாழ்.காங்கேசன்துறை-மயிலிட்டிப்பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டுப் பலியான ஆதரவாளரான,

**பொன்னுத்துரை வண்ணக்கிளி** (முகுந்தன் வீரமாணிக்கதேவன்துறை-மயிலிட்டி)

1989ஆம் ஆண்டு மட்டு, தன்னாமுனைப்பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றீகன்** (சின்னக்குட்டி கந்தசாமி - கோக்கல்மடு, கிரான்-மட்டு)

**தோத்திரன்—சமுத்திரன்** (தவநாயகம் முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

1990ஆம் ஆண்டு ஊர்காவற்துறைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப்.கரிகரன்** (கார்த்திகேசு புலேந்திரன் - கெருடாவில் வடக்கு, சாவகச்சேரி)

மட்டு-ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு தளவாய் வாசியான தமிழிளைஞன்.

அம்பாறை, மற்றும்காரைதீவுப்பகுதியினைச்சுற்றி வளைத்த சிறிலங்கா அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டு-சிவத்தப்பாலம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்,

**கப்டன் சத்துருக்கன்** (செல்லப்பா கிருபைராசா-பொத்துவில் - அம்பாறை)

**மேஜர் வேணு** (பொன்னுத்துரை வேணுதாஸ்-திருமலை வீதி - மட்டு)

**பிரசாந்தன்** (கந்தசாமி சங்கர் - ஏறாவூர் - 04-மட்டு)

**கண்ணாடிராஜா-பாண்டியன்** (பெரியபிள்ளை நடராஜா - இருதயபுரம் - மட்டு)

மன்னார் - மருதமடு, வேப்பங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் தமிழ்ப்புலி-றிச்சாட்** (முத்துச்சாமி தர்மராசா - பெரியபுல்லுமலை - மட்டு)

**லெப். கிருபா** (அருளானந்தன் அமுதன் - தாராபுரம் - மன்னார்)

**புண்ணியன்-அல்போன்ஸ்** (சீமான் கிறிஸ்ரியன்- - தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் - மன்னார்)

**குமாரன்** (வேலுப்பிள்ளை சுகுமார் - செல்வபுரம், பூநகரி - மன்னார்)

**லெப். இனியன்-றஸ்கின்** (முத்தையா இராமசாமி - தூத்துக்குடி, கன்னியாகுமாரி - தமிழகம்)

1992ஆம ஆண்டு மட்டு - படுவான்கரைப் பகுதியில் ஜெயகங்கா நடவடிக்கையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

உலங்குவானூர்திகளின் உதவிகளுடன் மட்டு-வவுணதீவு, ஆத்தியமலை, 19-ம்கட்டை, 36-ம்கிராமம், வெல்லவெளி, பழுகாமம், கொக்கட்டிச்சோலைப் பகுதிகளிலுள்ள பல கிராமங்களைச் சுற்றிவளைத்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 15க்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8094)



## அதிர்ஷ்டம் வெளிவந்தது

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவையினரால்அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு நேற்றுமுன்தினம் (9-12-93) இழுக்கப்பட்டது. இதோ அதிர்ஷ்டசாலிகளின் விபரங்கள் வருமாறு;

1-ம் இடம் 0921
2-ம் இடம் 0395
3-ம் இடம் 2786

ஆறுதல் பரிசில்களாக பின்வரும் இலக்கங்கள் தெரிவானது.

(1) 2020 (2) 3299 (3) 0575 (4) 0391 (5) 1915 (6) 5398 (7) 0533 (8) 2787 (9) 5936 (10) 3756.

குறிப்பு;- தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள் எதிர்வரும் திங்கள் (13-12-93) தொடக்கம் வெள்ளி (17-12-93) வரை காலை 10--12 மணிவரை மாணவர்அவை அலுவலகத்தில். தலைவர் நி. ஜனகனிடம் தொடர்பு கொண்டு பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம்.

(சி-8091)


# பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் தகர்ப்பு

பெற்றோர் தினமும்
பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலய பெற்றார் தினமும் பரிசளிப்புவிழாவும் வித்தியாலய அதிபர் திரு ந. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. விழாவிலே பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார் திருமதி செல்வநாயகி செல்லத்துரை பரிசில்களை வழங்கினார்.

---

...வினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

எமது மகனின் வீரச்சாவுச் செய்தி அறிந்து எமது இல்லம் வந்து எமது துயரில் பங்குகொண்ட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பல வகைகளிலும் உதவி புரிந்த அனைவர்க்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

32/5 அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

தந்தை, தாய்,
சகோதரி, சகோதரன்.

(6756)

---

கப்டன் சத்துருக்கன் (செல்லப்பா திருபைராசா - பொத்துவில் - அம்பாறை)

மேஜர் வேணு (பொன்னுத்துரை வேணுதாஸ் - திருமலை வீதி - மட்டு)

பிரசாந்தன் (கந்தசாமி சங்கர் - ஏறாவூர் - 04 - மட்டு)

கண்ணாடிராஜா-பாண்டியன் (பெரியபிள்ளை நடராஜா - இருதயபுரம் - மட்டு)

மன்னார் - மருதமடு, வேப்பங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மேஜர் தமிழ்ப்புலி-றிச்சாட் (முத்துச்சாமி தர்மராசா - பெரியபுல்லுமலை - மட்டு)

கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

உலங்குவானூர்திகளின் உதவிகளுடன் மட்டு-வவுணதீவு, ஆத்தியமலை, 19-ம்கட்டை, 36-ம்கிராமம், வெல்லவெளி, பழுகாமம், கொக்கட்டிச் சோலைப் பகுதிகளிலுள்ள பல கிராமங்களைச் சுற்றி வளைத்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 15க்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8094)

---


# பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் தகர்ப்பு
# [ஒப்ரேஷன் தவளை]

# வெற்றிவிழா - டிசம்பர் 11, 12, 13

வலிகாமம் கோட்டம் சார்பில் மேற்படி வெற்றிவிழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இடம் : யாழ். பல்கலைக்கழகம்

காலம் : 12-12-1993 ஞாயிற்றுக்கிழமை பி. பகல் 4.00 மணி

அனைத்து தமிழீழ மக்களையும் மேற்படி விழாவில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(பிற்பகல் 2.00 மணி தொடக்கம் வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன)

**பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், சங்கானை ப. நோ. கூ. சங்கம்,**

**சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.**

(சி-8095)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## 41-ம்நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
1976-04-30

தாயக மண்ணில்
1993-11-01

### 2-ம் லெப். சத்தியசீலன்
(கணேசன் ராஜசேகர்-சேகர்)

ஏழாலை வடக்கு, ஏழாலை.

தாயகம் மீட்டிடத் - தமிழ்மண்ணைக்காத்திட
தன்மானம் பெரிதென்று தன்னையே அர்ப்பணித்த
வீரனே!
அன்புவின் அரவணைப்பால் ஆயுதம் நீ ஏந்தி
சத்தியம் வெல்லும் என்றும் தலைவனின்
வழிநின்று மண்ணதுவாம் தமிழீழகண்ணதுவாம்
மணலாறுதன்னிலே தன்பாதம் பதித்திட்ட வீரனே!
சத்தியசீலனே ஆ-அச்செய்தி கேட்டு
எப்படித்துடித்தோம் ஆம் சத்திய
வேள்வியிலேநீயும் சரிததிரம்ஆனதை . . . .

11-12-93இன்று சனிக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறும் 41ஆம் நாள் நினைவஞ்சலியிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் சகபோராளிகளையும் நண்பர்களையும், உற்றார், உறவினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா
அக்காமார் (ரெஜி, வவி)

33 அராலி வீதி
ஓட்டுமடம்.
பொம்மைவெளி,
யாழ்ப்பாணம்.

(6836)

## 31-ம்நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
12. 4. 1970

தாயக மண்ணில்
11. 11. 1993

11-11-93 அன்று பூநகரி நாகதேவன்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

### 2-ம் லெப். மாதங்கி
(கார்லீன் நிரோஜினி தேவசகாயம்)

## வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அவசரத் தீர்வு காணக் கூடாது

### லங்கா தீப ஆசிரியர் தலையங்கம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படும்போது மிகவும் அவதானமாக முடிவு காண முன்வர வேண்டும். இந்த முடிவில் வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள மக்கள் மட்டுமன்றி தெற்கேயுள்ள மக்களும் இதனால் பாதிக்கப்பட நேரிடும் என்று 'லங்கா தீப' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

மிகவும் அவதானமான முறையிலும், தீர்க்கதரிசனத்தோடும் இப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான காயை அசைக்க வேண்டும். இதை விட்டுவிட்டு அவசரமாக முடிவெடுக்க முற்பட்டால் நாட்டின் சகல மாணவர்களுக்கும், விகாரைகளுக்கும், ஏன் ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களுக்கும் அரசாங்கம் காரணம் சொல்லித்தான் ஆக வேண்டும் எனவும் வடக்கு, கிழக்கு பிரச்சினையினால் தனியே வடக்கு, கிழக்கு மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. நாட்டிலுள்ள சகல மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் மேலும் கூறியுள்ளது.

## ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் 72ஆம் இலக்க சிகிச்சைக் களத்தில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதனால் அந் நோயாளி படுகாயமடைந்துள்ளார்

## புதிய மாணவர்களுக்கு துன்புறுத்தல் செய்யாதீர்

### பல்கலைக் கழக நிர்வாகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

புதிய மாணவர்களை வரவேற்று கலந்துரையாடி அறிவுரை கூறுவதை வரவேற்கும் அதே சமயம் புதிய மாணவர்களுக்கு உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ பாதிப்பை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம்என்றுபல்கலைக்கழகநிர்வாகம் விடுத்த அறிக்கையில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்ப பத்திரம் பெற வரும் மாணவர்களையும், இப்பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்று பதிவு செய்வதற்கு வரும் மாணவர்களையும் சிரேஷ்ட மாணவர்கள் துன்புறுத்தல் செய்வது தொடர்பான புகார்கள் கிடைத்திருப்பதாக தெரிவித்துள்ள அவர் சுற்றுநிருபம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில் துன்புறுத்தலில் ஈடுபடுவோர் இனங்காணப்படின் எடுக்கப்படக்கூடிய தண்டனை நடவடிக்கைகள் பற்றியும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே மருத்துவ பீடம் செயற்படுகிறது

### மருத்துவ மாணவர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவபீடம் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே செயற்பட்டு வருவதாக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் தேவையான நிரந்தர விரிவுரையாளர்களில் மூன்றிலொரு பகுதியினர் கூட இல்லாத நிலைஇருப்பதாகவும், செயன்முறை வகுப்புக்களைப் பொறுத்தவரையில் வழமையைவிட இருமடங்கையும்விடவும் அதிகமான மாணவர்கள் ஒரே நேரத்தில் கற்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகும் மாணவர்கள் எட்டு வருடங்கள்வரை கற்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் இன்றைய நிலைக்கு அதன் ஸ்தாபகர்களே பொறுப்பாளிகளாவர் என்றும் இக்கல்லூரி தொடர்பாக யாழ்பல்கலைக் கழக மருத்துவ மாணவர்களின் நிலைப்பாடு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு விளக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

தும்பளை நெல்லண்டையான் வெளியீட்டுக் கழக 6-வது நூலான சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜா குருக்களின் "ஆலயவழிபாடும் தத்துவமும்" நூல் வெளியீட்டுவிழா பருத்தித்துறை சிவன்கோவில் பார்வதவர்த்தனி கலா மண்டபத்தில் பாலபண்டிதர் மு வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற்றது யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆலய வழிபாடும் தத்துவமும் நூலை வெளியிட்டு வைத்தார். (25)

## அறிவித்தல்

கப்டன் பண்டிதரின் ஒன்பதாவது ஆண்டின் நிறைவாக தென்மராட்சி ரீதியிலான உதைபந்தாட்ட, கரபந்தாட்ட, தாச்சி சுற்றுப் போட்டிகள் நடைபெற இருப்பதனால் பங்குபற்றும் கழகங்கள் 20-12-93ற்கு முன்னர் செயலாளர் பண்டிதர் விளையாட்டுக்கழகம் பண்டிதர் குடியிருப்பு கெற்பேலி என்னும் விலாசத்திற்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு : குறிக்கப்பட்ட திகதிக்கு பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

செயலாளர்.
பண்டிதர் விளையாட்டுக் கழகம்
(6835)

## யாழ்ப்பாண மாநகரசபை இழுவைப் பெட்டிகளுடனான டிராக்டர்களை பதிவு செய்தல் - 1994

யாழ்ப்பாண மாநகரசபையினால்1994ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி வேலைகளில் தமது டிராக்டர்களை வாடகை அடிப்படையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ ஈடுபடுத்த விரும்பும் டிராக்டர் உரிமையாளர்கள் எதிர்வரும் 17.12.1993ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வருடாந்தப் பதிவுக் கட்டணமாக ரூபா 1000/-ஐ செலுத்தி யாழ்ப்பாண மாநகர சபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


மேலதிக விபரங்களை மாநகரசபையின் வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
08.12.1993

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-8092)

வெலிங்டன் சந்திக்கருகில்




UNIKCO
COMPUTER CENTRE
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி
புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

INTRODUCTION TO COMPUTER
AND
BASIC LANGUAGE

ஆரம்பம் : 14-12-1993

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
12. 4. 1970

தாயக மண்ணில்
11. 11. 1993

11-11-93 அன்று பூநகரி நாகதேவன்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மாதங்கி**
**(கார்லீன் நிரோஜினி தேவசகாயம்)**

நாகதேவன் துறையிலே சீறிவந்த பெரும்புயல் நீ
காலதேவன் அணைத்தானோ ஆறிடுமோஎமதுள்ளம்
கொய்யாத்தோட்டத்திலே அரும்பி
நிரோவாய் மொட்டவிழ்ந்தாய்
மணலாற்றில் நீ மலர்ந்து
மாதங்கியாய் மறைந்துவிட்டாய்
செந்தமிழும் உயரும்
எம்கொடியும் பறக்கும்
சிந்தனையில் நிறைந்த எங்கள்
நிரோவின் பெயர் நிலைக்கும்
பந்தமொடு பாசங்கள்
போற்றி தினம் துதிக்கும்
பாரினில் உன்புகழ்
என்றும் ஓங்கும்

இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து வேங்கைகளுக்கும் எமது இதய அஞ்சலிகள்

இவர் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள், மாமாமார், சித்திமார், உறவினர், நண்பர்கள்

இல 26|2 புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (6834)


---

தேவையான நிரந்தர விரிவுரையாளர்களில் மூன்றிலொரு பகுதியினர் கூட இல்லாத நிலைஇருப்பதாகவும், செயன்முறை வகுப்புக்களைப் பொறுத்தவரையில் வழமையைவிட இருமடங்கையும்விடவும் அதிகமான மாணவர்கள் ஒரே நேரத்தில் கற்க வேண்டிய நிலை காணப்படு றைய நிலைக்கு அதன் ஸ்தாபகர்களே பொறுப்பாளிகளாவர் என்றும் இக்கல்லூரி தொடர்பாக யாழ்பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் நிலைப்பாடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விளக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி கலா மண்டபத்தில் பாலபண்டிதர் மு வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற்றது யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆலய வழிபாடும் தத்துவமும் நூலை வெளியிட்டு வைத்தார். (25)

---


வெலிங்டன் சந்திக்கருகில்



# UNIKCO
## COMPUTER CENTRE

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.**

- WORD PROCESSING (Wordstar Rel - 5. 5) and MS-DOS
- d BASE III PLUS and MS-DOS
- LOTUS 1-2-3 and MS-DOS
- PASCAL LANGUAGE (Files and Graphics)
- BASIC LANGUAGE (Sound Graphics and Files)
- காலை, மாலை வகுப்புகள்
- தமிழில் விளக்கங்கள்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- PRACTICALS ON IBM, Compatibles
- Special Classes for Managers, Graduates, Accountants, Typists, Bankers, Clerks and Data Entry Operators.

ஆரம்பம்:- 12.12.93 (வார இறுதி நாள் வகுப்புகள்)
13.12.93 (வாரநாள் வகுப்புகள்)

மேலதிக விபரங்கட்கு:
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.
(சி-8086)

---

## வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி
## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

INTRODUCTION TO COMPUTER
AND
BASIC LANGUAGE

ஆரம்பம் : **14-12-1993**

**இத்துடன்**

1) Word Processing
2) Spread sheet
3) Graphics
4) Communication
5) Data Base க்கான மேலதிக செய்முறைப் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்

காலை, மாலை, வார நாள் வகுப்புக்கள்

விபரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
JAFFNA.
(சி/8090)


---

# பூநகரித்-தளம் தகர்ப்பு (ஒப்ரேசன் தவளை) வெற்றி விழா
# டிசம்பர் 11, 12, 13.

தமிழா!

இரத்தக் கடலில் முத்துக் குளித்து
ஒப்பில்லா வெற்றியை எடுத்துக் கொண்டு
எங்களின் தேசம் நிமிர்ந்து பார்க்கிறது
உலகம் இதை வியந்து நிற்கிறது
சிங்களம் கலங்குகிறது.

தமிழீழ மக்களே,

இந்த வெற்றியின் பெறுமதியைப் புரிந்து கொள்வோம். அதைப் போற்றிப் புகழ்ந்திட எல்லோரும் எழுந்து கொள்வோம்.

ஆம்,

தேகத்தில் தீமூட்டித் தீயவரைப் பொசுக்கிவிட்டு புன்னகைத்த முகத்தோடு பூரித்து நிற்கும் எம் தாயகத்தின் தலையிலே வெற்றியின் மகுடத்தை ஏற்றி வைப்போம்.

எதிர்வரும் 11, 12, 13 ஆம் நாட்களில் தமிழீழம் வெற்றிக் களிப்பில் திளைக்கட்டும்.

புகழ்பூத்த புனித மண் புதுக்கோலம்கொள்ளட்டும். சந்திகள் எல்லாம் வளைவுகளாகட்டும். வானவெளிகள் எல்லாம் வண்ணச் சோடனைகளாகட்டும். கோபுரங்கள், வீட்டுக் கூரைகள், வாகனங்கள், வர்த்தக நிலையங்கள் பள்ளிகள், திணைக்களங்கள் பார்க்கும் இடங்களெல்லாம் எழுச்சிக் கொடிகள் ஏறட்டும்.

அளவிட முடியாத அர்ப்பணிப்புக்களால் அடைந்த அரும் பெரும் வெற்றியை உணர்வுடன் போற்றுவோம்.

வேங்கைகளின் உயிரால் எழுதிய வெற்றியை உள்ளத்தில் ஏற்று உலகத்தின் வரலாற்று உச்சியில் உயர்த்தியே காட்டுவோம்.
அதற்காய் அனைவரும் எழுவோம்!

(சி-8095)

**சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம்**

## 2-ம் வருட நினைவஞ்சலி



அமரர்

## திரு. கனகசிங்கம் விஜெயகுமார்

(லண்டன் பல்கலைக்கழக பொறியியல் மாணவன்)

மலர்வு: 6-6-1967 உதிர்வு: 3-12-1991

திதி: 11-12-1993

எமது இதயங்களில் அழியாத ஓவியமாய் நிலைத்து நின்று வழிகாட்டும் அன்பு விஜெய் பண்பும், பாசமும் மிகு உனது நினைவுகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

உமது நினைவை மறவாத
அன்பு பப்பா, அம்மா, அண்ணா, அக்காமார் தங்கச்சிமார், அத்தான்மார், மருமகன், மற்றும் குடும்பத்தினர்.

'லக்குமி வாசா'
கரவெட்டிமேற்கு
கரவெட்டி. (6801)

## 31-ம் நாள்கண்ணீர்அஞ்சலி



## லெப். சாம்பவி

(தி ரகலிங்கம் சுசரித்தா)

பூநகரி இராணுவக் கடறபடைக் கூட்டு முகாம் தகர்ப்பு நடவடிக்கையின் போது 11 11-1993 அன்று வீரச்சாவை அணைத்துக் கொண்ட தமிழீழ பெண்கள ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் 2-வது லெப். சாம்பவிக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்

## 31-ம் நாள் நினைவுநாள்



## 2-ம் லெப்டினனட் ஈழப்பிரியா


(மதிவதனி நவரெட்னம்)

தாயின் மடியில் 1969-07-06 தாய்மண் மடியில் 1993-11-11

மின்னலின் பளிச்சென் றொளியிலே - உன்
முகம் சிரிப்பொலி முகமதில் மலர்ந்தது
இருளது முகிலது விலகிட விடிவெள்ளி பூத்தது
நெருப்பென
ரவையதும் குண்டதும் இருளதை கலைத்தது
புலியது பாய்ந்தது படையது அழிந்ததை
படமது எடுத்தது
இவ் வையம் பார்த்திட எம் சண்டை தெரிந்திட
ஆசை கொண்டதும்
சலை நுணுக்கமும் தொழில் நுட்பமும் தெரிந்திட்ட
வேங்கையாய்
பூநகரி அழிவதை படம்பிடித்த குயிலொன்று
மண்ணதை முத்தமிட்டு விதையாகி வீழ்ந்தது
வீழ்ந்த உன்வீரம் தமிழ் உள்ளவரை நிலைபெறும்
எமது பாதை எமது தலைவரின் பயணம் நேரானது
இவ்வழியில் உமது இலட்சியம் உமது கனவு
நாம் நனவாக்குவோம்.

ஒலிஒளி தொழில்நுட்பக் கல்லூரி,
நிதர்சனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
(6825) தமிழீழம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## வெள்ள நிவாரணம்வழங்க சங்கங்கள் பின்னடிப்பு

(நமது நிருபர்)

வெள்ள நிவாரணங்களை வழங்க யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தயக்கம் காட்டி வருவதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையினால் யாழ். மாவட்டத்தில் 80 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவர்களுக்கு முதல் மூன்று நாட்களுக்கும் சமைத்த உணவும் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு நிவாரணமும் வழங்கப்படும் என சமூகசேவைகள் பிரிவு அறிவித்திருந்ததுடன் இந்நிவாரணங்களை வழங்குமாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டிருந்தது-

ஏற்கனவே உணவு முத்திரைக்கான கொடுப்பனவாக பல லட்ச ரூபாக்களை சமூக சேவைகள் பிரிவு ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கவேண்டியுள்ள இந்நிலையில் வெள்ள நிவாரணங்களையும் வழங்க சங்கங்கள் பின்நிற்கின்றன.

இவ்வாறு பல கோடி ரூபாக்கள் நிலுவையாக இருப்பதால் சங்கங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச, சி)

### விவசாய விரிவாக்க நடவடிக்கை

உரும்பராய் செல்வபுரம் பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கும் நோக்கத்துடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், மக்கள் நலன் காக்கும் பிரிவு என்பவற்றின் அனுசரணையுடன் விவசாய அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது

### கமக்காரர்களுக்கு அறிமுக அட்டை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் கமக்காரர் அறிமுக அட்டையின் அறிமுக விழா அண்மையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. வலிகாமம் கோட்ட இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பெரும்பாக உத்தியோகத்தர் குழந்தைவேலு கலந்து கொண்டார். இவ்வைபவத்தில் கமக்காரர்களுக்கான அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டது.

### முதலாண்டு நிறைவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை பழவத்தை வலம்புரி அறிவாலய 1-ம் ஆண்டு நிறைவு விழா அறிவாலயத் தலைவர் திரு. பொன். பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. (25)

### ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 33-வது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் கழக மைதானத்தில் தலைவர் திரு. கு. இ. இராசநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிலே யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ துறைத் தலைவர் திரு. மு. நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (25)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## மேஜர் ஜெகநாதன்

(பெருமாள் சுந்தரலிங்கம்)

பாவற்குளம், வவுனியா.

தாயின் மடியில் 1970-12-02 தாயக மண்ணில் 1993-11-11

வன்னியில் வந்துதித்த் சோதரனே
தாய்நாட்டின் விடிவிற்காய்
விடுதலைப் பாதையில் வித்தான வீரனே
உன் கல்லறை மீது எம் கண்ணீர்த் துளிகள்
விரைவில் உன் கனவு பலிக்கும் - அன்று
உன் கல்லறை கூட கதை பேசும்

கந்தர்மடம். (6807) - நண்பர்கள்



## லெப். சாம்பவி

### (தி ரகலிங்கம் சுசரித்தா)

பூநகரி இராணுவக் கடறபடைக் கூட்டு முகாம் தகர்ப்பு நடவடிக்கையின் போது 11 11-1993 அன்று வீரச்சாவை அணைத்துக் கொண்ட தமிழீழ பெண் கள ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் 2-வது லெப். சாம்பவிக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண் ணீர் அஞ்சலிகளை காணிக்கை ஆக்குகின்றோம்.

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவன
ஊழியர்கள், போராளிகள்.

ராஜ வீதி,
கோபபாய்.
(6774)

# பூநகரி வெற்றித் திருநாள்



உதயம்
09.08 1975

வீரச்சாவு
11.11 1993

## வீரவேங்கை இளங்கீரன்

### (பாலசிங்கம் முரளிகிருஷ்ணன்)

தாவடி தெற்கு கொக்குவில்

தமிழீழ மண்மீட்புக்காக தம்மையே அர்ப்ப ணித்துத் தலைவன் கட்டளைக்கு அமைந்து களமேந் திப் பூநகரி மண்ணிலே களமாடி வேட்டேந்தி வீர சுவர்க்கம் எய்திய எமது செல்வன் இளங்கீரனையும் ஏனைய வீரவேங்கைகளையும் பூநகரி வெற்றித் திரு நாளில் பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.

எமது செல்வன் வீரவேங்கை எம்மத்தியில் இல்லையே என்ற ஏக்கத்திலும துயரிலும் அமிழ்ந்த எம்மை அணைந்து தேறுதல தந்த ஒவ்வொருவருக் கும் இதயபூர்வமான

அன்பு! நன்றி! வணக்கம்!

தாவடி தெற்கு,
கொக்குவில்.
(6832)


சி. அ. பாலசிங்கம்
(தந்தையார்)
மற்றும் குடும்பத்தினரும்.

வீழ்ந்த உன்வீரம் தமிழ் உள்ளவரை நிலைபெறும்
எமது பாதை எமது தலைவரின் பயணம் நேரானது
இவ்வழியில் உமது இலட்சியம் உமது கனவு
நாம் நனவாக்குவோம்.

ஒலிஒளி தொழில்நுட்பக் கல்லூரி,
நிதர்சனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

(6825)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## 2-ம் லெப். தென்பாண்டியன்

### (கெனடிற் அரியசீலன்)

— மணற்காடு —

மலர்வு:
02-10-1974

வீரச்சாவு:
11-11-1993

உன் சாவு
இங்கு சரித்திரமாகியுள்ளது.
உன் தியாகம்
இம் மண்ணை
வெளிச்சமாக்கும்.

இவருடன் பூநகரி-நாகதேவன்துறைக் கூட்டுப்படை இராணுவமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

இவரின் ஆத்மா சாந்திக்காக 11-12-93 சனி (இன்று) மாலை 5-00 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் இத்துடன் இன்று 11-12-93 சனிக் கிழமை எமதில்லத்தில் நடைபெறும் மதியபோசனத் தில் சகபோராளிகளையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

(6833)

பாளர் தலைமையில் நடை பெற்ற இவ் விழாவில் பெரும் பாக உத்தியோகத்தர் குழந் தைவேலு கலந்து சொண் டார். இவ்வைபவத்தில் கமக் காரர்களுக்கான அடையாள அட்டை விநியோகிக்கப்பட் டது.

## முதலாண்டு நிறைவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை பழவத்தை வலம்புரி அறிவாலய 1-ம் ஆண்டு நிறைவு விழா அறிவாலயத் தலைவர் திரு. பொன். பூர ணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. (25)

## மேஜர் ஜெகநாதன்

### (பெருமாள் சுந்தரலிங்கம்)

பாவற்குளம், வவுனியா.

தாயின் மடியில்
1970-12-02

தாயக மண்ணில்
1993-11-11

வன்னியில் வந்துதித்த சோதரனே
தாய்நாட்டின் விடிவிற்காய்
விடுதலைப் பாதையில் வித்தான வீரனே
உன் கல்லறை மீது எம் கண்ணீர்த் துளிகள்
விரைவில் உன் கனவு பலிக்கும் - அன்று
உன் கல்லறை கூட கதை பேசும்

கந்தர்மடம். (6807) - நண்பர்கள்

# 31-ம் நாள் நினைவலைகளில்



தாயக மண்ணில்:
03-06-1974

தாயக மண்ணுக்காக
பூநகரி மண்ணில்:
11-11-1993

## லெப்டினனட் கலையரசன்

### (வேலாயுதபிள்ளை மாலதன்)

நெஞ்சத்தில் தாயகத்தின் தாகம்
தோளில் கனல் கக்கும் ஆயுதம்
விழிகளில் சாதனை ஆர்வம், கொண்டு
ஒப்ரேசன் தவளையில் கலந்து
உனது தாகத்தையும் மேதினியில் பரவச் செய்தாய்

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

கோவில் வீதி,
நல்லூர்.
(6824)

என்றும் உமது நினைவுடன்
உறவினர்கள்.

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்

# பூநகரி வெற்றி விழா

## சிந்தனைக்கு

அடகு வைத்த நிலங்களை மீட்கலாம். ஆனால் கண்ணியத்தை அடகு வைத்தால், அதை ஒருபோதும் மீட்கவே இயலாது

கான் யெர்ஸ் மிடில்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ எண் - 05

## உலகிற்கோர் உதாரணம்

உடன்பாடுகளை மீறுதல், ஒப்பந்தங்களைக் கிழித் தெறிதல் என்பது சிறிலங்கா அரசைப் பொறுத்து புதிய தொன்றல்ல அதிலும், தமிழருடன் அல்லது தமிழர் சம்பந்தப்படும் விவகாரங்கள் தொடர்பாகச் செய்துகொள் ளப்படும் ஒப்பந்தங்கள் எதையும் சிறிலங்கா அரசு எப் பொழுதும் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை.

தமிழர் பிரச்சினை தொடர்பாக சிங்கள அரசியற் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களுடன் காலத்திற்குக் காலம் பல உடன்பாடுகளைச் செய்துள்ளனர். இதில் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன முதன்மையானவை யாக இருந்தன. ஆனால், இவ்வொப்பந்தங்கள் யாவை யும் சிங்கள அரசுகள் விரைவிலேயே கிழித்தெறிந்து விட்டன.

இதேபோன்றே, இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்பாட்டையும்கூட சிறி லங்கா அனுசரித்து நடக்கவில்லை. இதேவேளை, இந்தி யாவும் அதனை வலியுறுத்தத் தவறியமையினாலேயே விடுதலைப்புலிகள் இந்தியாவுடன் போரிட வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

அதாவது, இனப்பிரச்சினை தொடர்பான ஒப்பந்தங் களைச் செய்வதும், அதைப் பின்னர் கிழித்தெறிவதும் சிறிலங்காவைப் பொறுத்து சாதாரணமானதொன்று. இதனை தமிழ் மக்களும் தெளிவாகப் புரிந்து கொண் டுள்ளனர். இந்நிலையில் தான், சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை, சமாதான உடன்பாடுகள் என்பனவற் றில், தற்பொழுது தமிழ் மக்கள் அவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

சிங்கள அரசின் இப்போக்கை சர்வதேச சமூகம் இதுவரை எவ்வளவு தூரம் உணர்ந்து கொண்டிருந்தது என்பது கேள்விக்குரியதாகவே இருந்து வந்தது. ஏனெனில் வெளியுலகம் புரிந்துவந்த, வரும் உதவிகள் இக்கேள்வியை எழுப்ப வைத்துள்ளது. ஆனால், அண்மைக்காலச் சம்பவங்கள் இதனைச் சர்வ தேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவக் கூடியவையாகும். இவற்றைத் தவிர வேறு ஆதாரங்கள்

### வெற்றி வெற்றியென்று பாடுவோம் வாரீர்! வேங்கை வென்றதென்று ஆடுவோம் வாரீர்!!

பூநகரி கூட்டுத்தளத்திலிருந்து சிங்களப்படைகள் செய்த சிறுமைகள் கொஞ்சமா? நாகதேவன் துறையிலிருந்து வேகமாக வந்தவர் கிளாலிக் கடலிலே ஆடிய கோர தாண்டவம் கொஞ்சமா? குத்தியும், கிழித்தும் குழ ந்தைகளைக் கொன்றார். சுட்டும், வெட்டியும் கடலிலே எறிந்தார் பூநக ரித் தளத்திலிருந்து ஈனத்தனமாக இரவும், பகலும் எறிகணை வீசினார். வானிலே வட்டமிட்டுக் குண்டுமாரி பொழிந்தார் தமிழரின் குருதியில் கடலினைச் சிவக்கவைத்தார். மறக்கமுடியுமா?

### இந்தத் தளங்களைப் புலிப்படை வென்றது, ஆயிரம் பகைவரைப் போரிலே கொன்றது.

'இதய பூமி'யின் போது மண்கிண்டிமலை சரிந்தது. தவளைத்தாக் குதலிலே பூநகரியும் நாகதேவன்துறையும் புயலிலே பட்டுப் புழுதியாய்ப் போயின. 10-11-93 நள்ளிரவிலே வெடியோடு சேர்ந்து வேகமாய்ப் பாய் ந்த புலிகள், விடியலின் முன்னே வெற்றியெனும் படையலைத் தமிழீழத் துக்கு தந்தனர். எதிர்த்து நின்றவர் உதிர்ந்து வீழ்ந்தார். ஏனைய படை யினர் பூனையாய் ஓடினர். உலகம் வியக்கவும்-மானம் விழிக்கவும் கடலி லும், தரையிலும் ஒரே நேரத்தில் புலிகள் இயற்றிய புதியகாவியம் ''தவ ளைத்தாக்குதல்'' மரபுப்படைக்குரிய மாபெரும் வீச்சோடு புலிகள் நிகழ்த் திய தாக்குதல் ''தவளைத்தாக்குதல்''.

### விடுதலைப்புலிகள் மனம் தளராது! விடிகின்ற வரையில் மண் உலராது!!

கட்டைக்காட்டிலே 5 கோடி, மண்கிண்டிமலையிலே 5 கோடி, பூந கரியிலே 100 கோடி, கவசவாகனங்கள் - கனரகத்துப்பாக்கிகள் - நீருந்துப் படகுகள் - பீரங்கிச் சுடுகலன்கள் . . . .உலகம் வியக்கும் தவளைத்தாக்குத லிலே புலிகள் அள்ளிய போர்த் தளபாடங்களின் பெறுமதி கொஞ்சமல்ல. அதற்காகக் கொடுத்த விலையும் கொஞ்சமல்ல. ஒப்பில்லா மாவீரரின் தற்கொடைதான் புலிகள் கொடுத்த விலை.

### பகைவன் இழந்த ஆயுதம் இங்கே! பற்றிக்கொள்ளும் கரங்கள் எங்கே?

உயிரைக்கொடுத்து ஆயுதம் எடுத்தோம், உணர்வுடன் எழுக தாயகம் அமைப்போம். மக்களைக் காத்திடவே தற்கொடை தருகின்றார் மாவீரர். வெற்றிகொண்டாடும் வேளையிலே சுற்றி ஒருமுறை பாருங்கள். வீரமுண்டு, விடுதலையில் மாறாத உணர்வுமுண்டு, போரிடவும் எதிரியைக் கூறிடவும் வேகமுண்டு. வலுவுண்டு, விவேகமுண்டு, பகைவனின் நெஞ்சைப் பிளந்து வெல்லவும், தமிழீழத்தின் எல்லைக்கப்பால் எதிரியைத் தள்ளவும் ஆயுதங் கள் நிறைய உண்டு ஆனால் ஆட்பலம் உண்டா?

### ஆயுதங்கள் தானாகப் போர் புரியாது! ஆட்பலம் சேராமல் நாடமையாது!!

வெற்றிகொண்டாடும் வேளையிலே சுற்றி ஒரு முறை பாருங்கள். மண்கிண்டியிலே அடித்தோம். பகைவன் நானாட்டானைவிட்டு ஓடினான். பூநகரியைப் புழுதிசெய்தோம், சிலாவத்துறையையும், கொண்டச்சியையும் விட்டு விலாக்கள் தெறிக்க ஓடுகிறான். ஓய்ந்து கிடக்கும் ஒவ்வொரு துப் பாக்கிக்கும் ஒரு புலியிருந்தால், தேய்ந்து குலைந்து பகைப்படை மாயும் தமிழீழ மண்ணின் முழுமையும் விடுதலைபெறும்.

### வெற்றிபேசி வீட்டுக்குள் இருப்பதால் சுற்றிய பகைமை சிதறிவிடாது!

வெற்றிகொண்டாடும் வேளையிலே சுற்றி ஒருமுறை பாருங்கள். சீறி யடித்ததால் பகைவன் சிதறி ஓடினான். சோம்பியிருந்தால் மறுபடி வரு வான். மண்ணைத் தின்னவும், மனிதரைக் கொல்லவும், மின்னும் படைக் கலம் முழங்க வருவான். புலிகளின் வெற்றி குறித்துப் பெருமிதம் கொள் ளும் வேளையிலே பத்து, நூறு, ஆயிரமாகத் தமிழ்ப் புலிகளின் படையிலே சேருங்கள் உங்கள் விடுதலைக்காக உங்களைப் புலியோடு இணைத்துக் கொள்ளுங்கள்.

### தங்கிநிற்கும் பகைவனைத் தாக்குவோம்! எங்கள் நாட்டை எங்களுக்காக்குவோம்!!

வெற்றி கொண்டாடும் வேளையிலே சுற்றி ஒரு முறை பாருங்கள். பத்துமுறைகள் பாடைவராது. பகைவனுக்கும் உயிர் பத்திருக்காது உலகம் வியக்கும் உன்னதத் தலைவனின் பின்னே விலகிவிடாது இணைந்து வாருங் கள், இலட்சியப் பணியொன்று காத்திருக்கிறது, அலட்சியம் செய்யாது, அணியிலே சேருங்கள். கழுத்துக்கு மேலே தொங்கும் கத்தியை அறுத்து வீழ்த்துவோம்.

### கோயில் - மருத்துவமனை - குடியிருப்புக்களின் மீது குண்டினை வீசும் மிலேச்சரை ஒழிப்போம்.

நாட்டிக்கு வந்த கேட்டினைத் தீர்த்து, பூட்டிய விலங்கை உடைக்க நிமிர்வோம். வெற்றி, வெற்றியென்று தோள்தட்டி வாருங்கள் விடுதலைச் சங்கூதி விடியலை வரவேற்போம்.

### வீட்டுக்கு ஒருவர் விரைந்து வாரீர்! நாட்டினை விடுதலை செய்வோம் வாரீர்.

# போர் எதிர்ப்புஆர்ப்பாட்டமாக மாறிய மனித உரிமை தின ஊர்வலம்!

(கொழும்பு)

கொழும்பில் நேற்று மனித உரிமைகள் தினத்தை முன் னிட்டு பல்வேறு இயக்கங்கள், பெண்கள் இயக்கங்கள் என்ப வற்றால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் தின ஆர் ப்பாட்டம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக மாறியது என பி. பி. ஸியின் செய்தி யாளர் எல்.மோ, பர்ணான் டோ தெரிவித்தார்

கண் ஆஸ்பத்திரிச் சந்திக்கு அண்மையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின்போது கூடிய கூட்டம் போருக்கு எதிராக குரல் எழுப்பியது. ''இந்த யுத்தம் எங்களுக்கு வேண்டாம்'' ''உயிர் பலியி டும் யுத்தம் எங்களுக்கு வேண் டாம்'' என்ற கோசங்கள் இங்கு எழுப்பப்பட்டன,

''போருக்குப் போவது எங்கள் பிள்ளைகள், போரில் மடிவதும் எங்கள் பிள்ளைகள் விடுதலைப் புலிகளும் மனிதர் கள்தான், மனிதர்கள் மனி

தமில்லை, எனவே நாங்கள் இப்போரைக் கண்டிக்கி றோம், ஆட்களைக் கொல்வ தன் மூலம் எதனையும் வெற்றிகொள்ள முடியாது என நம்புகிறோம். எனவே இது சமாதான வழியில் தீர்த் துக் கொள்ளப்பட வேண்டி யது, அரசின் அதிகாரத்தை நிலைநிறுத்தவே இந்தப்போர் நடைபெறுகிறது. என்பது எங்களுக்கு தெரிகிறது'' என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிங்களப் பெண் ஒருவர் தெரிவித்தார் என எல்,மோ, பர்ணான்டோ

**பூநகரி**

டறிய வேண்டும்.

பிரபாகரனின் பிறந்த தின த்துக்கான பரிசிலாக தமிழீ

## எறிகணைவீச்சுக்கு வைத்தியர் காயம்

(நமது நிருபர்)

பாதுகாப்பு வலயத்தினுள் யாழ். போதனா மருத்துவ மனை வாயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு மருத் துவமனை டாக்டர்கள் விடுதி யில் இருந்த டாக்டர் சிவா னந்தன் காயமடைந்தார்.

மேற்படி பாதுகாப்பு வல யத்தினுள் அண்மையில் தொடர்ந்து சிறிலங்கா போர் விமானங்களும் பலாலி மண் டைதீவு பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இராணுவத் தினரும் தாக்குதல்களை நடாத்திவருவது தெரிந்ததே.

நேற்றுமுன்தினம் மேற் கொள்ளப்பட்ட எறிகணை ஏற்பட்ட சேதங்களை சர்வ தேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் நேற்று பார்வை யிட்டனர்.

மேற்படி தாக்குதல்தொடர் பாக தமது தலைமையகத் திற்கும் இராணுவ மேலிடத் திற்கும் அறிவித்துள்ளதாக வும் இனிமேல் மருத்துவ மனைப் பகுதியில் தாக்குதல் மேற்கொள்ளப்படமாட்டா தெனத் தெரிவிக்கப்பட்டதா கவும் அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாக பணிப்பாளர் தெரிவித்தார். (சி)

**பல்கலை.**

மாணவர் பிரதிநிதிகளை பல்கலைக்கழக மானியங்கள்

யாவும் அதனை வலியுறுத்தத் தவறியமையினாலேயே விடுதலைப்புலிகள் இந்தியாவுடன் போரிட வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

அதாவது, இனப்பிரச்சினை தொடர்பான ஒப்பந்தங்களைச் செய்வதும், அதைப் பின்னர் கிழித்தெறிவதும் சிறிலங்காவைப் பொறுத்து சாதாரணமானதொன்று. இதனை தமிழ் மக்களும் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர். இந்நிலையில் தான், சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை, சமாதான உடன்பாடுகள் என்பனவற்றில், தற்பொழுது தமிழ் மக்கள் அவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

சிங்கள அரசின் இப்போக்கை சர்வதேச சமூகம் இதுவரை எவ்வளவு தூரம் உணர்ந்து கொண்டிருந்தது என்பது கேள்விக்குரியதாகவே இருந்து வந்தது. ஏனெனில் வெளியுலகம் புரிந்துவந்த, வரும் உதவிகள் இக்கேள்வியை எழுப்ப வைத்துள்ளது. ஆனால், அண்மைக்காலச் சம்பவங்கள் இதனைச் சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவக் கூடியவையாகும். இவற்றைத் தவிர வேறு ஆதாரங்கள் தேவையுமில்லை.

அண்மைக் காலத்தில் சிறிலங்கா ஆயுதப் படையினர் இரு தடவைகள் யாழ். ஆஸ்பத்திரியை மையமாகக் கொண்ட பாதுகாப்பு வலயத்தினுள் தாக்குதலை நடத்தியுள்ளனர் இப்பாதுகாப்பு வலயம் முத்தரப்பு உடன்பாட்டின் மூலம் - விடுதலைப் புலிகள் இயக்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சிறிலங்கா அரசாங்கம்- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் உள்ளது.

இத்தாக்குதல்கள் மூலம், பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டதன் நோக்கமே கேள்விக்குரியதாக மாறியுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் தான் செய்து கொண்ட உடன்பாட்டை மீறியுள்ளது.

அதேவேளை, இவ் இரு தாக்குதலும் தவறுதலாகச் செய்யப்பட்ட தாக்குதல் என்றும் கூறப்பட முடியாது. ஏனெனில், தாக்குதல்கள் இரண்டும் பாதுகாப்பு வலயத்தின் எல்லைப் பகுதியில் இடம்பெறவில்லை, மையப் பகுதியிலேயே இடம் பெற்றுள்ளன. இத்தாக்குதல்களில் ஒன்றின் போது ஆஸ்பத்திரியும் சேதமடைந்தது. இந்த வகையில் இத்தாக்குதல்கள் இரண்டும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

இவ்வாறே 1992ஆம் ஆண்டிலும் சேந்தான்குளப் பகுதி குறித்து செய்து கொண்டிருந்த முத்தரப்பு உடன்பாட்டை அரசாங்கம் மீறியது. காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக பொருள்கள் இறக்குவதற்கென திறக்கப்பட்டிருந்த பாதையைப் பயன்படுத்தி ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

சிறிலங்கா அரசின் இந் நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டை மீறும் செயலாகும். இது அவர்கள் தமிழர் விவகாரம் தொடர்பான எந்தவொரு உடன்பாட்டையும் அனுசரித்துப் போற்றத் தயாராக இல்லை என்பதை புரிந்து கொள்ளப்போதுமானதாகும். இதனை இனப்பிரச்சினை தொடர்பாக மத்தியஸ்தம் பற்றிப் பேசும் அமைப்புக்களும், நாடுகளும் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இனப்பிரச்சினையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும், நிலைப்பாட்டினையும் புரிந்து கொள்ள முடியும்.

# போர் எதிர்ப்புஆர்ப்பாட்டமாக மாறிய மனித உரிமை தின ஊர்வலம்!

(கொழும்பு)

கொழும்பில் நேற்று மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு இயக்கங்கள், பெண்கள் இயக்கங்கள் என்பவற்றால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் தின ஆர்ப்பாட்டம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக மாறியது என பி. பி. ஸியின் செய்தியாளர் எல்.மோ, பர்ணான்டோ தெரிவித்தார்

கண் ஆஸ்பத்திரிச் சந்திக்கு அண்மையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின்போது கூடிய கூட்டம் போருக்கு எதிராக குரல் எழுப்பியது. ''இந்த யுத்தம் எங்களுக்கு வேண்டாம்'' ''உயிர் பலியிடும் யுத்தம் எங்களுக்கு வேண்டாம்'' என்ற கோசங்கள் இங்கு எழுப்பப்பட்டன,

''போருக்குப் போவது எங்கள் பிள்ளைகள், போரில் மடிவதும் எங்கள் பிள்ளைகள் விடுதலைப் புலிகளும் மனிதர்கள்தான், மனிதர்கள் மனிதர்களைக் கொல்வதில் அர்த்தமில்லை, எனவே நாங்கள் இப்போரைக் கண்டிக்கிறோம், ஆட்களைக் கொல்வதன் மூலம் எதனையும் வெற்றிகொள்ள முடியாது என நம்புகிறோம். எனவே இது சமாதான வழியில் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியது, அரசின் அதிகாரத்தை நிலைநிறுத்தவே இந்தப்போர் நடைபெறுகிறது. என்பது எங்களுக்கு தெரிகிறது'' என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிங்களப் பெண் ஒருவர் தெரிவித்தார் என எல்,மோ, பர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

### பூநகரி

டறிய வேண்டும்.

பிரபாகரனின் பிறந்த தினத்துக்கான பரிசிலாக தமிழீழத்தைக் கொடுக்க அரசாங்கத்தினால் முடியவில்லை. இதனால் பூநகரியை பிறந்த நாள் பரிசிலாக வழங்க வேண்டி நேர்ந்தது பூநகரி முகாமில் சிங்கள இளைஞர்கள் நாய், பூனைபோல் செத்துக் கொண்டிருக்கும் போது இராணுவத் தளபதி தனது சிறகுகளை ஒடுக்கிக் கொண்டு இருந்தார். முப்படைத் தளபதிகளும் தவறணைகளிலும், குளிரூட்டப்பட்ட அறைகளிலும் தமக்கு ஒன்றும் தெரியாதது போல இருந்தனர். உண்மையில் இவர்களுக்கு தண்டச் சம்பளமே வழங்கப் படுகிறது.

வடக்கு யுத்தத்தில் அரசுக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து எழுதிய பத்திரிகையாளருக்கு அரசிடமிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது ஆனால் பிரபாகரனின் பிறந்த தினத்துக்கு வடக்கில் தாக்குதல் நடக்கும் என்று கூறியதும் பத்திரிகைகள்தான் ஆனால் அதை அரசு அசட்டை செய்தமையால் தான் பூநகரியில் அரசுக்கு தோல்வி ஏற்பட்டது.

தெற்கில் ஜே.வி.பி இளைஞர்கள் மிருகங்கள் போல் குதறி எறியப்பட்டார்கள். ஆனால் வடக்கிலுள்ள இளைஞர்களுக்கு அந்த நிலை இல்லை இதிலிருந்து தெரிவது என்ன? இந்த நாட்டில் உண்மையான சரியான தலைவராக இருக்கக் கூடியவர் விஜேதுங்க அல்ல பிரபாகரனே என்பதே.

யுத்தத்தை வெற்றி கொள்ள முடியாவிட்டால் இராணுவம் எதற்காக இங்குள்ளது? பாதைகளைச் செப்பனிட இராணுவம் தேவையில்லை. எனவே உடனடியாக இராணுவம் கலைக்கப்படவேண்டும் இவர்களை தமது பகுதிகளிலுள்ள வயல்களை கொத்துவதற்கு அனுப்பினாலும் பிரயோசனமாக இருக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சுதந்திரக் கட்சியின் கோரிக்கை தமிழ்க் குழுக்களால் நிராகரிப்பு

இலங்கையில் கடந்த பத்து வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் இனப் போருக்குத் தீர்வு காணும் படி அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் நோக்கத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருக்கும் பேரணிகளில் கலந்து கொள்ளும் படி அக் கட்சி தமிழ் குழுக்களுக்கு விடுத்த அழைப்பை தமிழ்க் குழுக்கள் சில நிராகரித்துள்ளன.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எந்தத் தீர்வையும், எந்தத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை என்று தமிழ் குழுக்கள் தெரிவிக்கின்றன.

### வெற்றி

வடமராட்சியில் நேற்று கடற்புலிகளால் கலைநிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது. இதில் கடற்புலிகளின் பயிற்சிப் பள்ளி போராளிகளின் அணிவகுப்பு, வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரின் நாடகம், மற்றும் சாந்தனின் பூநகரிப் பாடல்கள் என்பன இடம்பெற்றன. நூற்றுக்கு மேற்பட்ட புகைக் கூடுகளும் வானில் விடப்பட்டன.

### சுகாதார

மருத்துவமனைக்கு சேதம் ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கும் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவிற்கும் தாம் அறிவித்துள்ளதாகவும் யாழ் போதனா மருத்துவமனைப் பொறுப்பாளர் தெரிவித்தார். (சி)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதற் பேரணி அடுத்த புதன்கிழமை கொழும்புக்கு வெளியே நடைபெறவுள்ளது.

சிங்களத் தீவிரவாதிகள் மற்றும் மிதவாதிகளின் பிரதிநிதியாக இருக்கும் சுதந்திரக் கட்சிக்கும் தமிழ்க் குழுக்களுக்கும் இடையே இருக்கும் அவநம்பிக்கையே தமிழ்க் குழுக்கள் பேரணிகளில் கலந்து கொள்வதை மறுத்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு பி.பி.ஸி தெரிவிக்கிறது.

இந்த வாரத் தொடக்கத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஈ.பி.ஆர் எல் எவ் வையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தாம் நடத்தவிருக்கும் பேரணியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தது

இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கு இரு நோக்கங்கள் இருப்பதாக பி. பி. ஸி தெரிவிக்கின்றது. ஒன்று நடைபெறும் போருக்கு விரைவில் தீர்வு காணும்படி அரசுக்கு நெருக்கடி கொடுப்பது, மற்றது தீர்வு ஒன்றும் கண்ணுக்கெட்டாத கொடிய போர் என இந்தப் போரைப் பற்றித் தெற்கில் மக்களுக்கு ஒரு விழிப்பை ஏற்படுத்துவது

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடத்த விருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியை ஈ. பி. ஆர். எல். எவ். வரவேற்றுள்ளது. ஆனால், போருக்குத் தீர்வு காணும் சொந்த திட்டம் ஒன்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கும் வரை தாம் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்வதில்லை என்று ஈ.பி ஆர். எல். எவ் அறிவித்துள்ளது

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது சொந்தத் திட்டம் ஒன்றை முன்வைக்க மறுத்து வந்திருக்கிறது. இலங்கையின் வடக்கையும், கிழக்கையும் பிரிக்க நினைக்கும் ஒரு கட்சியுடன் தாம் நெருங்கிப் போகத் தயாராக இல்லை என தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியுள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதி தமிழரின் தாயகம் எனத் தமிழர் கருதுகின்றனர். தன்மானம் உள்ள எந்தத் தமிழனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடத்தவிருக்கும் பேரணியில் சேர்ந்து கொள்ள மாட்டார் என்று தமிழர் ஒருவரை மேற்கோள் காட்டி பி பி.ஸி தெரிவித்தது.

தமிழ்க் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோரிக்கையை நிராகரித்திருப்பது வியப்பைத்தரும் விஷயமல்ல. இவ்வாறு பி.பி.ஸி மேலும் தெரிவித்தது,

### கிளிநொச்சியில்

சென்றது.

இத்தாக்குதல்களில்காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு:

மாதகலிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற நாகமுத்து (50வயது), சுப்பையா மல்லிகா (19 வயது), வடிவேல் புவினாம் (20 வயது), ராம்குமார் சுதர்சன் (8 வயது), சுகிலன் (13 வயது), சுப்பிரமணியம் அற்புதலிங்கம் (42 வயது)இவர்கள்காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

# எறிகணைவீச்சுக்கு வைத்தியர் காயம்

(நமது நிருபர்)

பாதுகாப்பு வலயத்தினுள் யாழ். போதனா மருத்துவமனை வாயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு மருத்துவமனை டாக்டர்கள் விடுதியில் இருந்த டாக்டர் சிவானந்தன் காயமடைந்தார்.

மேற்படி பாதுகாப்பு வலயத்தினுள் அண்மையில் தொடர்ந்து சிறிலங்கா போர் விமானங்களும் பலாலி மண்டைதீவு பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரும் தாக்குதல்களை நடாத்திவருவது தெரிந்ததே.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால்மருத்துவமனைக்கு ஏற்பட்ட சேதங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் நேற்று பார்வையிட்டனர்.

மேற்படி தாக்குதல்தொடர்பாக தமது தலைமையகத்திற்கும் இராணுவ மேலிடத்திற்கும் அறிவித்துள்ளதாகவும் இனிமேல் மருத்துவமனைப் பகுதியில் தாக்குதல் மேற்கொள்ளப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாக பணிப்பாளர் தெரிவித்தார். (சி)

### பல்கலை.

மாணவர் பிரதிநிதிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே அழைத்திருந்தது. ஆனால் மாணவர் பிரதிநிதிகள் கொழும்புசென்றதும் கூட்டம் ஏற்கனவே பிற்போடப்பட்டது தெரிய வந்தது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்குழு மேற்கொண்ட முயற்சியின்பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் பண்டிதரெட்ணா சிறிதளவு நேரம் யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் குழுவைச் சந்திக்க இணங்கினார். யாழ் பல்கலைக் கழக மாணவர்களின் கல்வி நிலை, பௌதிக வளங்கள் பற்றாக்குறை பற்றிக் கேட்டறிந்தாரே தவிர எந்த முடிவும் உடனடியாகத் தெரிவிக்கவில்லை என்றும் தெரியவருகிறது.

மேலும் இக்குழுவினர் அனைத்துப்பல்கலைக் கழக மாணவ ஆலோசகர் கலாநிதி விஜேயசேகராவைச் சந்தித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்து விளக்கினர். தொடர்ந்து இக் குழுவினர் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரைச் சந்தித்து யாழ் மாணவர்களது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். இவ் ஒன்றியத்தின் தலைவர் ஹேரத் மற்றும் இதன் உறுப்பினர்கள் ஆகியோர் யாழ் மாணவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தாம் ஒத்துழைப்பதாகத் தெரிவித்தனர்,

இதன் அடிப்படையில் மேற்படி ஒன்றியம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவைச் சந்தித்து யாழ் மாணவர்களது பிரச்சினைகள் எடுத்து விளக்கப்பட்டது. 92/93 கல்வி ஆண்டுக்கான அனுமதியால் மாணவர்கள் பாதிக்கப்படுவது குறித்து எடுத்துக் கூறப்பட்ட போதிலும் இந்த நடைமுறையில் மாற்றம் எதுவும் ஏற்படுத்த இணக்கம் காணப்படவில்லை.

## ஒளிவிழா

யா தொழில்நுட்பக் கல்லூரி கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தால் 12-12-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா சிறப்பாக நடைபெற இருக்கிறது, அதில் சிறப்பு விருந்தினர்களாக,

அருட்திரு S. H. ஜெபநேசன்
,, D. S. தியாகராஜா
,, A. W. ஜெபநேசன்

ஆகியோர் அருள் உரைகளை வழங்க உள்ளனர். அத்துடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

நன்றி

(6837) கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம்

## ஆண் எழுதுவினைஞர் தேவை

தமிழ்/ ஆங்கிலத்தில் நன்கு தட்டெழுத்துச் செய்யும் அனுபவமும், கடிதங்கள் எழுதக் கூடியவருமான ஓர் ஆண் எழுதுவினைஞர் தேவை, ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம், விண்ணப்பங்களை எதிர் வரும் 21-12-93க்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்

செயலாளர்,
வட மாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்.
10, சம்பியன் வீதி,
கொக்குவில். (சி 8099)

## யாழ்ப்பாண மாநகரசபை
## கூறுவிலை

கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் யாழ்ப்பாண மாநகரசபைக்கு தேவைப்படுவதினால் அவற்றை வழங்கக் கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக் கூறுவிலைகள் 17.12.93ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கப்பட வேண்டும். இது விடயமாக மேலும் தகவல் அறிய விரும்பின் அலுவலக நேரத்தில் மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும் பொருட்களின் விபரம் வருவாறு.

### AUDIO EQUIPMENTS

| | | |
|---|---|---|
| 01. | Amplifier 12 Volts A.C.D.C 60 Watts | 01 No. |
| 02. | Mike 600 ohms | 05 Nos. |
| 03. | Stand | 05 Nos. |
| 04. | Jack Pins | 02 Nos. |
| 05. | 12" Speaker Goodmans 16 ohms | 02 Nos. |
| 06. | 12 Volts Battery 90 Am | 01 No. |
| 07. | Audio Mixer | 01 No. |

மாநகர ஆணையாளர்,
1993.12.09 (சி-8093) யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் வீரவணக்க நினைவாஞ்சலி அழைப்பு

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
21 — 04 — 1973



தாயக மண்ணில்
11 — 11 — 1993

### கப்டன் இளம்பரிதி/விஸ்வநாத்
(ஆறுமுகம் றஜீந்திரன்)
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

இளம்புலி வீரனே இளம்பரிதி
எங்கள் தேசத்தின்
காற்றின் மூச்சிலும் கடலின் வீச்சிலும்
பனித்துளியின் சிலிர்ப்பிலும்
இன்னும் இன்னும் அனைத்திலும்
என்றும் நீ வாழ்ந்து இருப்பாய்
ஏனெனில் உனது மரணம்
தேசத்திற்கானது, உன் மக்களுக்கானது
தாளை தாழ்த்துகிறோம் வீரனே...

உன்பிரிவால் தவிக்கும்
(6842) குடும்பத்தினர்

31ஆம் நாள்

## வீர நினைவலைகள்

வீரப் பிறப்பு:
29 | 03 | 1976



வீரச்சாவு;
11 | 11 | 1993

### லெப்ரினன்ட் சுடரொளி (சிம்மான்)
( ஜீவரட்ணம் ஜெகதீபன் (தர்சன்) )

## கண்ணீர் அஞ்சலி

### ஏ. சி. கந்தசாமி
(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள மாகாண அத்தியட்சகர்)

எமது கழக ஸ்தாபகரும் தலைவருமான ஏ. சி. கந்தசாமி அவர்களின் திடீர் மரணச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம்.


அன்னாரின் இழப்பால் துயருறும் மனைவி, மக்கள் மற்றும் சுற்றத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிதது்க் கொள்ளுகிறோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று சனிக்கிழமை 11-12-93 காலை 10-30 மணிக்கு இடம்பெறும், அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகம் தர வேண்டுகின்றோம்.

அஞ்சல் தொலை தொடர்பு இளைப்பாறிய
ஊழியர் நலன்புரிக் கழகம், யாழ்ப்பாணம்.
(6844)

## மரண அறிவித்தல்கள்



### தம்பையா தியாகராஜா

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய தம்பையா தியாகராஜா காலமானார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கலாவதி (B.A), பத்மதேவி(கணனி இயக்குனர் கொழும்பு), தயானந்தம் (ஓவியர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர்), மாலதி, கருணாகரன் (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), றகுணா (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி). தனம் (யாழ். மத்திய கல்லூரி), கணநாதன் (போராளி), கமலநாதன் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச் செல்வராஜன் (சதாஸ் மோட்டோஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்), பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும், சங்கீதாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11.12.1993) இரண்டு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

## விவசாய மன்னர் விண்ணப்பம் நீடிப்பு

வட தமிழீழத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் 93, 94 பெரும் போக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிடையே இருந்து உச்ச விளைவினை பெறும் விவசாயியைத் தெரிவு செய்து ''விவசாய மன்னர்'' எனும் கௌரவம் மிக்க சிறபபுப் பட்டத்தினையும். பெறுமதி மிக்க பரிசில்களையும் வழங்கி கௌரவிக்கும் நடவடிக்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பாடடு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

கூடுதலான விவசாயிகளை இந்தப் போட்டியிலே ஈடுபடுத்தும் நோக்குடன் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி எதிர் வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கபபட்டுள்ளதாக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின்

யில் புலிவீரர்கள் வீரகாவியம் படைத்துள்ளனர்.

தமிழீழம் என்ற தனியரசை நோக்கிய பாதையில் எமது விடுதலைப்போரை முன்னோக்கி வேகமாக உந்தித்தள்ளியுள்ள இந்த வரலாற்றுத் தாக்குதலில் 458 புலிவீரர்கள் உயிர்த்தியாகம் புரிந்துள்ளனர்.

பலம் வாய்ந்த ஒரு கடற் படைத்தளத்தையும், சக்தி வாய்ந்த ஒரு கவசவாகனப் படைப்பிரிவையும் கொண்ட 2,000ற்கும் மேற்பட்ட படையினருடன் சுமார் 25 கி. மீ. பரப்பளவிலான பகுதியில் அமைந்திருந்தபிரமாண்டமான படைகதளமாக பூநகரி கூட்டுப்படைத்தளம் அமைந்திருந்தது

குடாநாட்டின்மீது கடந்த இரண்டு வருடங்களில் சிங்களப்படைகள் தொடுத்துவரும் முற்றுகைப்போரில் பூநகரி கூட்டுத்தளம் பிரதான பாத்திரத்தை வகித்து வந்தது. கிளாலி கடனீரேரியூடாக பயணம்போன 300ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்ற கொலைகாரர்களின் இருப்பிடமாகவும் இத்தளமே விளங்கி வந்தது.

குடாநாட்டு மக்களின் உயிர்நாடியை நெரிக்க உதவிய இக் கூட்டுப்படைத்தளம் மீது 11-ம் திகதி அதிகாலை தொடக்கம் 13-ம் திகதி மாலைவரை புலிவீரர்கள் தொடுத்த பெருந்தாக்குதலின் பின் பூகம்பத்தில் அகப்பட்ட பகுதிபோல இப்படைத்தளம் சிதைந்துவிட்டது. அத்துடன் சிங்களப் படைத்துறைத் தலைமை செயற்படுத்தி வந்த போர்

கப்பட வேண்டும். இது விடயமாக மேலும் தகவல் அறிய விரும்பின் அலுவலக நேரத்தில் மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும் பொருட்களின் விபரம் வருவாறு.


## AUDIO EQUIPMENTS

| | | |
|---|---|---|
| 01. | Amplifier 12 Volts A.C.D.C 60 Watts | 01 No. |
| 02. | Mike 600 ohms | 05 Nos. |
| 03. | Stand | 05 Nos. |
| 04. | Jack Pins | 02 Nos. |
| 05. | 12" Speaker Goodmans 16 ohms | 02 Nos. |
| 06. | 12 Volts Battery 90 Am | 01 No. |
| 07. | Audio Mixer | 01 No. |

1993. 12. 09 (சி-8093)

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் வீரவணக்க நினைவாஞ்சலி அழைப்பு



தாயின் மடியில் மலராக:
**14 - 12 - 1965**

தமிழீழ மண்ணில் வித்தாக:
**12 - 11 - 1993**

## மேஜர் பூவழகு (விக்கி)
### (சண்முகநாதன் விக்னேஸ்வரன் நயினாதீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீண்டகால உறுப்பினரும், இராணுவ தொழில் நுட்பப் பிரிவின் பொறுப்பாளரும் ஆகிய மேஜர் பூவழகு (விக்கி) அவர்களின் 31ஆம் நாள வீரவணக்கமும் நினைவஞ்சலியும் 12-12-1993 ஞாயிற்றுக்கிழமை (நாளை) எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் அனைத்துப் போராளிகளையும், நண்பர்களையும், உறவினர்களையும் பங்குபற்றி மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(6845)

சி. நா. சண்முகநாதன்
குடும்பத்தினர்
சுகபாணி ஸ்ரோர்ஸ்

## வீர நினைவலைகள்

வீரப் பிறப்பு:
29
|
03
|
1976



வீரச்சாவு:
11
|
11
|
1993

## லெப்ரினன்ட் சுடரொளி (சிம்மான்)
### ( ஜீவரட்ணம் ஜெகதீபன் (தர்சன்) )

உன் எண்ணக் கருவே
எமது வாழ்வு
உன் நினைவுடன் எமதுபணி
தொடரும்.

நடவடிக்கை 'தவளை' யின் போது வீரச்சாவை அணைத்துக் கொண்ட சக போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

(சி 8101)

**நண்பர்கள்.**

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
28
—
12
—
1978



தாயக மண்ணில்
11
—
11
—
1993

## 2ம்-லெப். கார்வண்ணன்
### (எட்வேட் தேவானந்)

(பெரியவிளான், இளவாலை)

''புலிகளின் படையணி புயலாய் எழுந்தது
பூநகரி களத்தினில் கார்வண்ணனும் புகுந்தான்
கடற்படைத் தளத்தினில் காவியம் படைத்தான்
கயவரை விரட்டியே தேவா களத்தினில்
மடிந்தான்''

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(6846)

என்றும் உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## தம்பையா தியாகராஜா

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய தம்பையா தியாகராஜா காலமானார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கலாவதி (B.A), பத்மதேவி(கணனி இயக்குனர் கொழும்பு), தயானந்தம் (ஓவியர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர்), மாலதி, கருணாகரன் (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), றகுணா (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி). தனம் (யாழ். மத்திய கல்லூரி), கணநாதன் (போராளி), கமலநாதன் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச் செல்வராஜன் (சதாஸ் மோட்டோஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்), பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும், சங்கீதாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11.12.1993) இரண்டு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:

'இலட்சுமி பவனம்'
3 ஆம் கட்டை
பருத்தித்துறை வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தி. தயானந்தம்
(மகன்)

(இ)



## சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை

இவர் பழைய லங்காஅபிமானிஅச்சகப்பங்காளரும், தற்போதையஸ்ரீஜெயாஅச்சகப் (சாவகச்சேரி) உரிமையாளரும் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கரம்பனிலும், தற்போது சாவகச்சேரியிலும் வசித்தவருமாகிய சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை நேற்று காலமானார். அன்னாரது பூதவுடல் 11.12.93 இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லமாகிய சரசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, கச்சாய் புனித லிகோரியர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் லிகோரியர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

பாலத்திடல்,
சரசாலை வடக்கு.
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்.

(6848)

கூட்டுப்படைத்தளம் அமைந்திருந்தது

குடாநாட்டின்மீது கடந்த இரண்டு வருடங்களில் சிங்களப்படைகள் தொடுத்துவரும் முற்றுகைப்போரில் பூநகரி கூட்டுத்தளம் பிரதான பாத்திரத்தை வகித்து வந்தது. கிளாலி கடனீரேரியூடாக பயணம்போன 300ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்ற கொலைகாரர்களின் இருப்பிடமாகவும் இத்தளமே விளங்கி வந்தது.

குடாநாட்டு மக்களின் உயிர்நாடியை நெரிக்க உதவிய இக் கூட்டுப்படைத்தளம் மீது 11-ம் திகதி அதிகாலை தொடக்கம் 13-ம் திகதி மாலைவரை புலிவீரர்கள் தொடுத்த பெரும்தாக்குதலின் பின் பூகம்பத்தில் அகப்பட்ட பகுதிபோல இப்படைத்தளம் சிதைந்துவிட்டது. அத்துடன் சிங்களப் படைத்துறைத் தலைமை செயற்படுத்தி வந்த போர் முறைத்திட்டமும் தவிடு பொடியாகிவிட்டது.

இத்தளத்திலிருந்த 1000ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுவிட்டனர் 100 கோடி ரூபா பெறுமானமுள்ள ஆயுததளபாடங்களை படையினர் இழந்துவிட்டனர் என்று கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

சிங்கள இனத்தை சோகத்தில் ஆழ்த்திவிட்ட இப்பெருந்தாக்குதலில் புலிவீரர்கள் கைப்பற்றிய ஆயுததளபாடங்களின் சக்தியும், அவற்றின் எண்ணிக்கையும் எமது இயக்கத்தின் ஆயுதபலத்தை திடீரென அதிகரிக்கச் செய்துவிட்டது.

இப்பேராயுதங்களும், அவற்றின் சுடுதிறன்களும் விடுதலைப்போரின் போக்கை தமிழினத்திற்குச் சார்பான வகையில் திசை திருப்பிவிடவல்லது என்பது தமிழினம் மகிழ்ச்சியுடன் உள்வாங்கும் ஒரு செய்தியாகும்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

புலிவீரர்களின் அர்ப்பணிப்புக்களால் பெற்றுக்கொள்ளப்படும் இந்தப் பெருவெற்றிகள் தமிழீழம் என்ற உறுதியான இலட்சியப் பாதையில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இந்த விடுதலை இலட்சியத்தில் நாம் ஒன்றுதிரண்டு எதிரியின் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.

இப் பெருவெற்றியில் நாம் பறித்தெடுத்த ஆயுத பலத்துடன், ஆட்பலத்தையும் அதிகரித்து எமது தேசியவிடுதலை இயக்கத்தை பலம் பொருந்தியதாக கட்டியெழுப்புவோம்

எமது பலம்தான் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எமது இளைஞர்களும், இளம்பெண்களும் ஆயுதமேந்தும் போதுதான் எமது பலம் பெருகும்.

எமது பாதுகாப்புக்கு அதுவே ஓரே வழி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.